# பதவி – வெற்றிடம்

**<u>வடமேல் மாகாண கல்வி திணைக்களத்தில் வடமேல் பல்வி பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு</u>**

வடமேல் மாகாண கல்வி திணைக்களத்தில் வெற்றிடமாவதற்கு உள்ள கல்விப் பணிப்பாளர் பதவிக்காக நியமிப்பதற்கு வடமேல் மாகாண பிரதம செயலாளரின் பரிந்துரை மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரப்படி தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் பணிபுரிகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 1 ஆம் தர உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

*01. தகைமைகள்:*

I. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 1 ஆம் தரத்தில் 05 ஆண்டுகளுக்கு குறையாத சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான பதவிக்காலம் இருக்க வேண்டும்.

II. விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியாகும் போது பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கு தேவையான ஏனைய தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஆண்டு சம்பள உயர்வுகள் அனைத்தும் பெற்று திருத்திகரமான அல்லது சிறந்த செயல்திறன் நிலையை அடைந்திருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பப் படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முந்தைய ஐந்து ஆண்டுகளுக்குள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அல்லது ஒழுக்காற்று தண்டனைக்கோ உள்ளாகாதவராக இருக்க வேண்டும்.

*02. தேர்ந்தெடுக்கப்படும் முறை:*

வடமேல் மாகாண கௌரவ ஆளுநரது அங்கீகாரத்துடன் வடமேல் மாகாண ஆளுநரது அலுவலகத்தினால் பெயர் குறிப்பிடப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் தகுதி வரிசையில் தெரிவு செய்யப்படும்.

***குறிப்பு:*** தகைமைகளை நிரூபிக்கும் அனைத்து சான்றிதழ்களினதும் உறுதிப்படுத்தப்படுத்தப்பட்ட போட்டோ பிரதி, தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதி விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

*03. விண்ணப்பப்படிவம் சமர்பித்தல்:*

அனைத்து விண்ணப்பங்களும் முறையாவும் சரியாகவும் பூர்த்தி செய்து .............................. ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு திணைக்களத் தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஊடாக (மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தராயின் உமது விண்ணப்பப்படிவம் மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளரின் சிபாரிசுடன் அனுப்பப்பட வேண்டும்) "ஆளுநரது செயலாளர், ஆளுநரது பணிமனை, மாளிகை, குருணாகல்" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் இடும் கடித உறையின் இடது மேல் மூலையில் "வடமேல் மாகாண கல்வி பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பப் படிவம் கோரல்" என்று குறிப்பிடப்பட வேண்டும். குறித்த திகதியின் பின்

கிடைக்கும் விண்ணப்பப் படிவம், பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவம் மற்றும் விண்ணப்பப் படிவம் கோரப்படும் இறுதி திகதிக்கு குறித்த தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளது விண்ணப்பப் படிவம் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவக் கால தாமதம் அல்லது காணாமல் போதல் பற்றி எந்தவொரு முறைப்பாடுகளையும் வடமேல் மாகாண ஆளுநரது அலுவலகத்தினால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக வழங்கப்படாத விடயங்கள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் வடமேல் மாகாண ஆளுநருக்கு உரித்துடையது.

இந்த அறிவிப்பில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி வசனங்களிடையே ஏதாவதொரு முரண்பாடுகள் ஏற்படுமாயின் சிங்கள மொழியின் வசனங்கள் அதிகாரப்படுத்தப்படும்.

இப்படிக்கு,

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களது கட்டளைப்படி,

ஆளுநரது செயலாளர்,
ஆளுநரது பணிமனை,
வடமேல் மாகாணம்.